# 16 துறவற வாழ்வு

ஆரம்பகாலத்தில் அநேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை நெருக்கமாகப் பின்பற்றி பரிசுத்த தனத்துடன் வாழ்வதற்காகத் தத்தம் வீடுகளிலே மணத்துறவைப் பின்பற்றி ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபட்டனர். இவர்கள் தபோதனர் எனப்பட்டனர். மூன்றாம் நூற்றாண்டளவில் அவர்கள் குழுக்களாக வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. ஏகாந்திகள் அல்லது வனத்துப் பிதாக்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவர் தேப்ஸ் சின்னப்பராவர் (கி.பி 227-342) அவருடைய சீடரான எகிப்து அந்தோனியாரின் காலத்தில் வனாந்தரங்களை அணுகி ஐயாயிரக் கணக்கான துறவிகள் வாழ்ந்தார்கள் என ஆதாரங்கள் கூறுகின்றன. தங்களுடைய ஆன்மீக வாழ்வை வளமாக்க துறவிகள் துன்பங்களை அனுபவித்துக் குழுமவாழ்வில் பங்கேற்றனர்.

துறவற வாழ்வை முறைப்படுத்த உழைத்தவர்களாக தூய பசில், தூயஜெறோம், தூய அகுஸ்தினார், தூய அம்புறோஸ் ஆகியவர்களைக் குறிப்பிடலாம். துறவற குழுமவாழ்வின் ஆரம்ப கர்த்தாக்களாக தூய பக்கோமியோ, தூய ஆசீர்வாதப்பர் என்பவர்களைக் குறிப்பிடலாம். விசேடமாகத் துறவற வாழ்வுக்கான ஒழுங்கு விதிமுறைகளை எழுதியவர்கள் இவர்களாவர்.

மலை மீது தியானம் செய்து கொண்டிருந்தவரும், மக்களுக்கு இறை அரசைப் போதித்தவரும், நோயாளிகள், அங்கவீனர்களைக் குணமாக்கியவரும், பாவிகளை நீதிமான்களாக மாற்றியவரும் சிறுவர்களை ஆசீர்வதித்தவரும், அனைவருக்கும் நன்மை செய்தவரும், தன்மை அனுப்பிய தந்தைக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருந்தவருமான கிறிஸ்து துறவிகள் மூலம் வெளிப்படுத்தப் படவேண்டும்.

திருச்சபை இல.46

துறவற வாழ்வில் ஒரு கிறிஸ்தவன் தனது திருமுழுக்கு வாக்குறுதியை அதிக பொறுப்புடன் ஆழமான முறையில் நிறைவேற்றுகிறார். துறவற வாழ்வு என்பது ஓர் இறை அழைத்தலும், விசேட கொடையுமாகும். ஒரு துறவி வார்த்தையால் மட்டுமன்றி செயலாலும் நற்செய்தியை வெளிப்படுத்தும் ஒருவராக வேண்டும்.

**துறவற வார்த்தைப்பாடுகள் 3 ஆகும்**

- **கற்பு** : மணத்துறவு நிலையில் இறையரசுக்காகத் தமது முழு வாழ்வையும் அர்ப்பணித்தல்.
- **ஏழ்மை** : இவ்வுலகப் பொருள் செல்வங்கள் மட்டில் பற்றற்று உரிமை கோராது இருத்தல்.
- **கீழ்ப்படிதல்** : இறை சித்தத்தை ஏற்று தமது சபைத் தலைவர்களுக்குப் பணிந்து வாழ்தல்.

**துறவற சபைகள்**

- குருத்துவம் சார்ந்த துறவிகள்
- குருத்துவம் சாராத துறவிகள்
  - அருட் சகோதரர்கள்
  - அருட் சகோதரிகள்

**துறவற வாழ்வின் பண்புகள்**

- **குழும வாழ்வு**: துறவிகள் குழுமமாக வாழ்வர். உதாரணம்: ஒன்றாகச் செபித்தல் ஒன்றாக உண்ணுதல்.
- **செபவாழ்வு**: துறவற வாழ்வின் இன்றியமையாத ஒரு பண்பாகும்.
- **பணிவாழ்வு**: இறைஆட்சி தூதுரைப் பணிக்காகத் தம்மை அர்ப்பணிப்பர். உதாரணம்: ஆசிரியபணி, சமூக சேவை

## குருத்துவம் சார்ந்த துறவிகள்

※ **அமல மரித்தியாகிகள் சபை**
- ஏழைகளுக்கு நற்செய்திமை அறிவித்தல்.
- கல்விப் பணி
- மறைக் கல்விப் பணி
- மறையுரை ஆற்றுதல்.

※ **சில்வெஸ்ரர் பெனடிக் சபை**
- செப வாழ்வு
- கல்விப் பணி
- பங்குப் பணி
- இறை மகிமைக்காகக் குழுமமாக வாழுதல்.

## குருத்துவம் சாராத துறவிகள்.

※ **மாறிஸ் கோதரர்கள் சபை**
- கல்விப் பணி
- இளைஞர்களுக்கான சுய தொழிற்பயிற்ச்சி

※ **அன்புச் சகோதரர் சபை.**
- கல்விப் பணி
- சமூகப் பணி

※ **தூய ஜோண் பப்ரிஸ் டி லாசால் சகோதரர் சபை**
- கல்விப் பணி
- இளைஞர் உருவாக்கப் பணி

※ **பிராசிஸ்கன் மறைத்தூதுச் சகோதரர் சபை**
- மறையை அறிவித்தல்.
- சிறுவர் இல்லங்களை நடாத்துதல்.

## அருட்சகோதரிகள் சபை

**1. திருக்குடும்பக் கன்னியர் சபை**
- கல்விப் பணி
- சமூகப் பணி
- சிறுவர்
- இளையோர்
- குடும்பப் பணி
- மறைத்தூதுரைப் பணி
- பங்குப் பணி

**2. நல்லான் கன்னியர் சபை.**

- கல்விப்பணி
- இளம் பெண்கள் வளர்ச்சியும் பராமரிப்பும்.
- அனாதைகள் முதியோர் இல்லங்கள் நடாத்துதல்.

**3. தூய தூதர்கள் கன்னியர் சபை**

- கல்விப் பணி.
- சிறுவர் பராமரிப்பு.
- இளைஞர், யுவதியர் பணி.

**4. அன்புச் சகோதரிகள் சபை.**

- கல்விப் பணி
- வயோதிபர் இல்லம் நடாத்துதல்.
- மறைக்கல்விப் பணி.
- பங்குப் பணி.

**5. திருச்சிலுவை கன்னியர் சபை.**

- மருத்துவப் பணி.
- கல்விப் பணி.
- சமூகப் பணி.
- பங்குப் பணி.
- மறைக்கல்விப் பணி.

**6. ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபை.**

- முதியோர் ஏழைகள் பராமரிப்பு.

**செயற்பாடு**

1. துறவற வாழ்க்கை தொடர்பாக கத்தோலிக்க சஞ்சிகைக்குக் கட்டுரை ஒன்று வரைக.
2. துறவற வாழ்வின் மூலம் உமது வாழ்க்கைக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் ஐந்து எழுதுக.
3. துறவற வாழ்க்கைக்கு வரும் சோதனைகளை மேற்கொள்ள அவர்களுக்கு தேவையான சக்தியையும் தைரியத்தையும் கேட்டு எமது மீட்ராம் இயேசுவுக்கு ஒரு செபம் எழுதுக.

**வாழ்க்கைக்கு**

துறவிகளின் சேவையைப் பாராட்டுங்கள்.